2021 பிப்ரவரி 4]

(தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

24. 2017 ஆம் ஆண்டு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகளின் 48 ஆம் விதியைச் சேர்ந்த (4) ஆம் துணை விதியின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முறையில், வரி விவரப்பட்டியலை தயாரிக்க வேண்டிய பதிவு பெற்ற நபர்களில் 1–10–2020 ஆம் நாள் முதல் 31–10–2020 ஆம் நாள் வரையிலான காலத்தில் மேற்சொன்ன முறையைத் தவிர வேறு வகையில் வரி விவரப்பட்டியலைத் தயாரித்த அத்தகைய பிரிவைச் சேர்ந்த நபர்கள், விவரப்பட்டியலின் நாளிலிருந்து 30 நாட்களுக்குள் பொது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மின்னணு வலைதள வாயிலில், படிவம் GST INV–*01–ல் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை பதிவேற்றம் செய்வதன் வாயிலாக அத்தகைய விவரப்பட்டியலுக்கான விவரப்பட்டியல் குறிப்பு எண்ணைப் பெறவேண்டும் என்றும், அவ்வாறு பெறத் தவறும் நேர்வில் மேற்சொன்னவை விவரப்பட்டியலாக கருதப்படமாட்டாது என்ற சிறப்பு நடைமுறையை அறிவித்தது குறித்து 3–10–2020 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு* (B1)*த் துறையின் அரசாணை (நிலை) எண் 148–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு சூதாட்டம் மற்றும் காவல் சட்டங்கள் (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 11/2020) (ஆங்கிலம்)

2. 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 12/2020) (ஆங்கிலம்)

3. 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 13/2020) (ஆங்கிலம்)

4. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் உரையாற்றும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ்–ஆங்கிலம்)

5. 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் *2* ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

—